**சுருக்கம்**

கூட்டுறவு – 31.3.2006 அன்று நிலுவையிலுள்ள அனைத்து விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தது – வழிகாட்டுதல் நெறிமுறைகளைப் பின்பற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிசி1)த் துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.96** **நாள்: 05.07.2006**

**படிக்க:**

1. அரசு ஆணை (நிலை) எண்.70, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 13.5.2006
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடித எண். ந.க. 65624/2006 வேகதி1 நாள் 29.5.2006

----

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 31.3.2006 அன்று அனைத்து விவசாயிகளும் கூட்டுறவு சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய விவசாயக் கடன் நிலுவைத் தொகையை முழுவதுமாக தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசாணையை செயல்படுத்த ஏதுவாக இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிடுகிறது. இந்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றும்படி அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் அறிவுரை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை அறிக்கையாக வாரந்தோறும் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.மச்சேந்திரநாதன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
தனி அலுவலர்,
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை – 1.
தனி அலுவலர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னை – 4.

**நகல்:-**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
அரசுச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

# இணைப்பு

## அரசு ஆணை (நிலை) எண் 70, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1) துறை நாள் 13.05.2006ன்படி 31.03.2006–ல் நிலுவையில் உள்ள விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வது குறித்த வழிமுறைகள்

அனைத்து விவசாயிகளும் கூட்டுறவு சங்கங்களுக்கு 31.3.2006ல் செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையை முழுவதுமாக தள்ளுபடி செய்து அரசு ஆணை (நிலை) எண் 70 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1) துறை நாள் 13.05.2006ல் ஆணையிட்டுள்ளது.

## குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால கடன்களுக்கான நெறிமுறைகள்

### 1. தகுதி

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விவசாயக் கடன்கள் வழங்கும் இதர வகையான சிறப்பு சங்கங்களும் அடங்கும்

| வ. எண். | சங்கங்களின் வகை |
|---|---|
| 1 | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி |
| 2. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி |
| 3 | பயிர் வளர்ப்போர் வங்கி |
| 4 | கிராமப்புற வங்கி |
| 5 | கூட்டுறவு விவசாய சேவை சங்கம் |
| 6 | மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் |
| 7 | தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி |
| 8 | நீரேற்றும் பாசன கூட்டுறவு சங்கங்கள் |

இத்திட்டம் மேற்குறிப்பிட்ட இனங்களில் கலைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும் பொருந்தும்.

மேற்குறிப்பிட்ட சங்கங்களில் தனி நபர் உறுப்பினர் அளவிலான கீழ்க்காணும் கடன்களுக்கான 31.3.2006ல் நிலுவையிலுள்ள கடன் நிலுவைத் தொகைகள் அசல் மற்றும் வட்டியுடன் முழுவதுமாக அறவே தள்ளுபடி செய்யப்படுகிறது.

போலி ஆவணங்களின் அடிப்படையில், பினாமியாக வழங்கப்பட்டதாக நிரூபிக்கப்படும் கடன்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.
கீழ்க்கண்ட கடன்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்:–

(அ) குறுகிய கால பயிர்க் கடன்.
(ஆ) நகையீட்டின் பேரில் வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க் கடன்.
(இ) குறுகிய கால பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்டது மற்றும் மறுமாற்றியமைக்கப்பட்டது.
(ஈ) குறுகிய கால பயிர்க்கடன் மறுஅட்டவணைப்படுத்தப்பட்டது.
(உ) குறுகிய கால பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்டு / மறுமாற்றியமைக்கப்பட்டு பின்னர் தனிக்கடனாக முடக்கப்பட்டது.
(ஊ) மத்திய கால வேளாண்மைக் கடன் மற்றும் வேளாண் சார்ந்த கடன்.

(எ) மத்திய கால வேளாண்மைக் கடன்கள் மறு அட்டவணைப்படுத்தப்பட்டது.

(ஏ) பயிர்க்கடன்கள் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு காலகட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசுத் திட்டங்களின் கீழ் சங்கங்களுக்கு/ உறுப்பினர்களுக்கு தொகைகள் ஏதும் பெறப்படவேண்டியிருப்பின் அவ்வகையான கடன்களும் இதில் அடங்கும்.

(ஐ) தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள பண்ணைச் சார்ந்த கடன்கள்.

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் (நிலவள வங்கிகள்) விவசாயிகளுக்கு பண்ணைச் சார்ந்த மற்றும் பண்ணைச் சாராக்கடன்கள் வழங்கி வருகின்றன. பண்ணைச் சாராக் கடன்கள் திட்டத்தின்கீழ் நிலத்தினை அடமானம் வைத்து போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல், கல்யாண மண்டபம் மற்றும் வீடு கட்டுதல், ஒளி நகல் பெருக்கி (ஜெராக்ஸ்) மற்றும் கணினி தொடர்புடைய வியாபாரம் போன்ற இனங்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இம்மாதிரியான கடன்கள் இதர கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் மூலமும் வழங்கப்படுகிறது. மேற்படி கடன்கள் விவசாயம் அல்லாத காரியங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களாக இருப்பதால் அம்மாதிரியான பண்ணைச்சாராக் கடன்களுக்கு அரசு அறிவித்துள்ள தள்ளுபடி திட்டம் பொருந்தாது.

## 2. <u>கணக்கீட்டு முறை:</u>

### i) <u>குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்கள்</u>:

(அ) 31.3.2006ல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நிலுவையிலுள்ள, மேற்கண்ட தகுதியுடைய அனைத்து வகையான கடன்களையும் (அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் இதர இனங்களும் சேர்த்து) தொகுத்து 1.4.2006ல் அசல், வட்டி, ஆக கூடுதலாக ஒரே தொகையாக பராமரிக்க வேண்டும். இத்தொகை தான், ஒவ்வொரு உறுப்பினருக்கும் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாகும். விவசாய கடன் அட்டை திட்டத்தில் உள்ள கடன்களும் இதில் அடங்கும். இவ்வாறு தொகுக்கப்பட்ட தொகையை 1.4.2006ல் அரசிடமிருந்து சம்பந்தப்பட்ட உறுப்பினருக்காக வரவேண்டிய தொகை என காண்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) இதே போன்று மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி அளவிலும் மேற்கண்ட கணக்கீட்டு வழிமுறைகள் வழுவாது பின்பற்றவேண்டும். விவசாயிகள் செலுத்தவேண்டிய கூட்டுறவு பயிர்க் கடன்களுக்கான தள்ளுபடித் தொகையினை அரசு தவணை முறைகளில் விடுவிக்கவுள்ளதால், இந்நிலுவைத் தொகைக்கு அரசு வழங்கும் வட்டியினை ஈடுசெய்துகொள்ளவேண்டும். எனவே, 1.4.2006 முதல் உயர்நிதி நிறுவனங்கள் தொகுக்கப்பட்ட தொகைக்கு/நிலுவைத் தொகைக்கு சார்பு சங்கங்களிடமிருந்து காலமுறை வட்டி ஏதும் வசூலிக்கக்கூடாது.

### ii) <u>நீண்டகாலக் கடன்கள்:</u>

(அ) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 31.03.2006 அன்று நிலுவையில் உள்ள தகுதி பெற்ற அனைத்து கடன்களிலும் ஒவ்வொரு கடனுக்கும் அசல், வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி மற்றும் வரவேண்டிய இனங்கள் ஆகிய மொத்த தொகையும்

முடக்கப்பட வேண்டும் (Blocked Amount). மேற்படி கடனுக்கு 01.04.2006 முதல் எவ்வித வட்டியும் எழுப்பக்கூடாது.

(ஆ) அவ்வாறே, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளவிலும் தொடர்புடைய கடன் கணக்குகளில் அசல், வட்டி, கூடுதல் வட்டி , அபராத வட்டி மற்றும் வரவேண்டிய இனங்கள் அனைத்தும் கணக்கிட்டு, வங்கிவாரியாக முடக்கப்பட வேண்டும். மேற்படி முடக்கப்பட்ட தொகைக்கு மாநில வங்கி, தொடக்க வங்கிக்கு எவ்வித வட்டியும் எழுப்பக் கூடாது.

(இ) தொடக்க வங்கி அளவில். அசல், வட்டி, கூடுதல் வட்டி, அபராத வட்டி மற்றும் வரவேண்டிய இனங்கள் அனைத்தும் கணக்கிடப்பட்டு கடன்தாரர்கள் வங்கிக்கு முழுமையாக செலுத்திவிட்டதாக கருதி வரவு வைக்கப்பட்டு, அவ்வாறு வரவு வைக்கப்பட்ட முழுத்தொகையும் அரசிடமிருந்து வரவேண்டிய இனமாக கணக்கில் கொள்ள வேண்டும். ( Suspense recoverable amount from Government )

(ஈ) அவ்வாறு அரசிடமிருந்து வரவேண்டிய இனமாக கருதப்பட்ட முழுத் தொகையும் ஒரே தவணையில் வழங்கப்படாமல், அரசால் தவணை முறையில் வழங்கப்படுமே யானால், அத்தொகை தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தேசிய வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கு நேரடியாக செலுத்தப்பட்டு, விகிதாச்சார அடிப்படையில் ( Pro-rata ) தொடக்க வங்கிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(உ) தொடக்க வங்கிகளின் கணக்கில் விகிதாச்சார அடிப்படையில் வரவு வைக்கப்பட்ட தொகைகள், அந்தந்த வங்கிகள் கணக்கில் மாநில வங்கியின் முடக்கப்பட்ட தொகையில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(ஊ) மேற்படி முடக்கப்பட்ட தொகைக்கு அரசால் அளிக்கப்படும் வட்டியினை பெற்றுக்கொள்ளவேண்டும்.

## 3. <u>தொகுக்கப்பட்ட கடன்தொகைகளை சரிபார்த்தல்</u>

### i) <u>குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்கள்</u>:

(அ) உறுப்பினர் கடன்கணக்கு வாரியாக விவரங்களை சங்கத்தின் செயலர் விடுதல் இன்றி முழுமையாக பட்டியல் தயார் செய்யவேண்டும். அதில் போலி ஆவணங்களின் அடிப்படையிலும், பினாமியாகவும் வழங்கப்பட்ட கடன்கள் நீக்கப்பட வேண்டும். அதனை சங்கத்தின் தனி அலுவலர் சரிபார்த்து சங்கச் செயலர் மற்றும் தனி அலுவலருடன் உரிய தீர்மானம் மற்றும் சான்றுகளுடன் கூடிய கையொப்பத்துடன் மத்திய கூட்டுறவு வங்கியின் சரக மேற்பார்வையாளர் / கள மேலாளரிடம் அளிக்கவேண்டும்.

(ஆ) சரக மேற்பார்வையாளர்/கள மேலாளர், இவ்விவரங்களை சம்பந்தப்பட்ட வங்கி ஆவணங்களுடன் சரி பார்த்து, அதன் அடிப்படையில் மேலொப்பத்துடன் மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

(இ) மத்திய வங்கியால் நேரடியாக வழங்கப்பட்ட விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்களை பொறுத்தமட்டில் கிளை/கள மேலாளர்களால் பட்டியல் தயாரிக்கப்பட்டு உதவிப் பொது மேலாளர்களால் சரிபார்க்கப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) இவ்வாறு பெறப்பட்ட பட்டியலை, மண்டல இணைப்பதிவாளரால் நியமிக்கப்படும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பணியாளர் உள்ளிட்ட இரண்டு அல்லது மூன்று உறுப்பினர் கொண்ட குழுவினரால் முழுமையாக சரிபார்க்கப்பட்டு சரியான விவரங்களை, துணைப்பதிவாளர் சரக வாரியாக நிர்ணயிக்கப்படும் படிவத்தில் ஒரு மாத காலத்திற்குள் மண்டல இணைப்பதிவாளரின் கூட்டுக் கையொப்பத்துடன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெறப்பட்ட பட்டியல்களை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி தொகுத்து அரசிடமிருந்து தொகை பெற ஏதுவாக முழுமையான பிரேரணையை பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## ii) <u>நீண்ட காலக்கடன்கள்:</u>

(அ) அரசு அறிவிக்கும் நீண்டகாலக் கடன் தள்ளுபடிக்கு தகுதி பெற்ற கடன்தாரர்களுடைய 31.03.2006ல் உள்ளபடி கடன் நிலுவை விபரப்பட்டியலை அந்தந்த தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் செயலர்கள் 5 நகல்கள் தயாரிக்க வேண்டும். ஏற்கனவே ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட போலி ஆவணங்களடிப்படையிலும், பினாமியாகவும் வழங்கப்பட்ட கடன்களை நீக்கிவிட்டு பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

(ஆ) இந்த விவரப்பட்டியலில், அந்தந்த கடன்களுக்கான 31.03.2006 வரையிலான அசல் நிலுவை, வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை கணக்கிட்டு மொத்த கடன் நிலுவை விவரங்கள் கடன்தாரர் வாரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

(இ) இவ்விபரப்பட்டியலை தொடர்புடைய வங்கியின் தனி அலுவலர் சரிபார்த்து ஒப்பமிட வேண்டும்.

(ஈ) வங்கியின் இக்கடன் தள்ளுபடிக்கான மொத்த தொகைக்கு வங்கியின் தனி அலுவலர் நிர்வாகக் குழுவின் தீர்மானம் இயற்றி சரக துணைப்பதிவாளர் மூலம் மண்டல இணைப்பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(உ) மண்டல இணைப்பதிவாளர், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து பெறப்பட்ட தள்ளுபடி பிரேரணையில் உள்ள கடன் கணக்குகளில், குறைந்தபட்சம் 15 சதவீதக் கடன் கணக்குகளை, ஒரு கூட்டுறவு சார் பதிவாளர் தலைமையிலான குழு அமைத்து சரிபார்க்க வேண்டும். இக்குழுவில், மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சார்பில் ஒரு அலுவலரும் இடம் பெறுவார்.

(ஊ) அவ்வாறு சரிபார்க்கப்பட்ட கடன் பட்டியலில், குழுவால் கண்டறியப்பட்ட தகுதியில்லா கடன்களை நீக்கியும், தொகை கணக்கீடுகள் தொடர்பான குறைகளை நீக்கியும், பட்டியல் இறுதி செய்து மாநில வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதன் நகல் ஒன்றினை சரக துணைப்பதிவாளர்களுக்கும், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தனி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(எ) மாநில வங்கி இது தொடர்பான மாவட்ட வாரியான தொகுப்பு பட்டியலையும், தகுதியற்ற கடன்கள் பட்டியலையும் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## 4. <u>நிதி பகிர்ந்தளிக்கும் முறை</u>

தமிழக அரசு, மொத்த தள்ளுபடி தொகையான ரூ.6866 கோடியை, ஐந்தாண்டுகளில் 8 சதவீத வட்டியுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும். மேற்படி தகுதியுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய அரசு தவணை முறையில் அளிக்கும் நிதியுதவியை மொத்த உறுப்பினர் அளவிலான கடன் நிலுவையில் எந்த விகிதாசாரத்தில் அரசிடமிருந்து பெறப்படுகிறதோ அதே விகிதாசாரத்தில் அனைத்து அடுக்குகளிலும் நேர் செய்யப்படவேண்டும்..

$$\frac{\text{அரசு அளிக்கும் தொகை}}{\text{மாநில அளவில் மொத்த உறுப்பினர் அளவிலான கடன் நிலுவை}} \times 100$$

## <u>5. இதர குறிப்புகள்</u>

(1) 1.4.2006 முதல் நாளது தேதிவரை இத்திட்டத்தின்கீழ் குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள கடன்களுக்கு ரொக்கமாகவோ அல்லது சர்க்கரை ஆலைகளிலிருந்து வரப்பெற்ற கரும்பு கிரயத்தொகை மூலம் வரவு வைக்கப்பட்டிருப்பின், இத்தொகையினை அரசிடமிருந்து நிதியுதவி பெற்றவுடன் ஒரே தவணையில் திருப்பி செலுத்த வேண்டும்.

(2) 31.3.2006 அன்று நிலுவையிலுள்ள அனைத்து விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. நீண்டகால கடன் பெற்றவர்கள் 1.4.2006 முதல் 31.5.2006 வரை ரூ.12.64 கோடி செலுத்தியுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் செலுத்தியுள்ள கடன் தொகையினை மீள அவர்களுக்கு திருப்பி அளிக்கலாம். 01.04.2006 முதல் 06.06.2006 வரை ரூ.110.98 கோடி அளவிற்கு குறுகிய மற்றும் மத்திய காலக் கடன் விவசாயிகளால் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது. இந்த தொகைகளில், ஒரு பகுதி நபார்டு போன்ற மேல்நிலை கூட்டுறவு நிதி நிறுவனங்களுக்கும், அரசுக்கும் செலுத்தப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை வங்கிகளால் உடனடியாக விவசாயிகளுக்கு திருப்பி வழங்க இயலாது. எனவே விவசாயிகள் திரும்ப செலுத்தியுள்ள மேற்கண்ட தொகையை திரும்ப அவர்களுக்கு அளிப்பதற்கு பதிலாக அத்தொகையை அவர்களது கணக்கில் வைப்புத் தொகையாக வைக்கப்பட வேண்டும். வைப்புத் தொகை முதிர்வடையும்போது ,அந்நிறுவனத்தின் நடைமுறையில் உள்ள வட்டித் தொகையுடன் வைப்புத் தொகை அவர்களுக்கு திரும்ப அளிக்கப்பட வேண்டும்.

(3) இத்திட்டத்தின்படி, தகுதியுள்ள கடன்கள் முடக்கப்பட்டுள்ளதாலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் சொந்த நிதி ஆதாரம் பாதிக்கப்படாமல் இருக்கக் கருதியும், அரசிடமிருந்து தொகை முழுவதுமாக வரப்பெறும் வரை அங்கத்தினர் பேரில் நிலுவையுள்ள பங்குத் தொகையை வாபஸ் செய்வதோ/வேறு கடன்களுக்கோ/புதிய கடன்களுக்கோ ஈடாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இதே முறையை உயர்நிதி நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும்.

(4) அரசு சார்ந்த திட்டங்களின் கீழ் கடன்களுக்காக அரசிடமிருந்து பெறப்பட்ட மான்யம் போக மிகுதி நிலுவை நிற்கும் தொகைக்கு மட்டுமே தள்ளுபடி திட்டம் பொருந்தும்.

(5) ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் மற்றும் நிலுவையின்மை சான்றும் அளிக்கப்பட வேண்டும்.

(6) அரசு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளதால் விவசாயிகளின் கடன் கணக்குகளை முடிவு கட்டி அடமானம் வைத்துள்ள நில உடமை ஆவணங்களின் மூல பத்திரங்கள்/நகைகளை உடனடியாக விவசாய நோக்கங்களுக்காக கடன் பெற்ற விவசாயிகளுக்கு திருப்பி அளிக்கப்படவேண்டும்.

(7) அனைத்து விவசாயக் கடன்களும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் கூட்டுறவு சங்கங்கள் விவசாயக்கடன்களை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது.

(8) விவசாயக் கடன்கள் வசூல் செய்ய தமிழ் நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதி 1988ன்படி வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக கைவிட வேண்டும்.

(9) கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகள் புதிய கடன் பெறத் தகுதியுடையராவர்.

(10) புதியதாக வழங்கப்படும் கடனை, வட்டியுடன் உரிய காலத்தில் வசூலிக்க கூட்டுறவு சங்கங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(11) விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்யும்போது, அவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்தான் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(12) கூட்டுறவு சங்கங்களில் கடன் தள்ளுபடி பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் தனிப்பட்ட முறையில் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகையை தெளிவாக குறிப்பிட்டு கடிதம் அனுப்ப வேண்டும்.

(13) தொடக்க கூட்டுறவு வங்கிகளின் அறிவிப்பு பலகையில், அச்சங்கத்தில் கடன் பெற்றுள்ள மொத்த விவசாயிகள், கடன் தள்ளுபடி விவரம் ஆகியவற்றை பொது மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுவரொட்டி மூலம் விளம்பரம் செய்ய வேண்டும்.

(14) கூட்டுறவு கடன் தள்ளுபடி தொடர்பான உரிய விவரங்கள் அடங்கிய சுவரொட்டி தயார் செய்து, சம்பந்தப்பட்ட அனைத்துக் கூட்டுறவு வங்கிகளிலும், கிராமப்

பகுதிகளிலும் ஒட்டப்பட வேண்டும். அதில், தள்ளுபடி செய்யப்பட்ட கடன் விவரம், பயனாளிகள் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியினால் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகை பயனாளிகள் எண்ணிக்கையுடன் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

(15) இக்கடன் தள்ளுபடி கூட்டுறவு சங்கத்தில் உள்ள பேரேடுகளில் தள்ளுபடி செய்யப்பட்டு நேர் செய்யப்பட்டுள்ளதா என்று உறுதி செய்யப்பட வேண்டும்.

**சு.மச்சேந்திரநாதன்**
**அரசு செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்